# பத்திரிக்கைச் செய்தி

வேலூர் மாவட்டத்தில் ஆட்சேபனையற்ற மற்றும் ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து, ஆண்டு வருமானம் ரூ.3,00,000/- (மூன்று இலட்சம்)க்கு மிகாமல் ஈட்டும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு அரசு ஆணை எண்.318-ன் கீழ் இலவச வீட்டுமனை பட்டா வழங்கிடும் பொருட்டு வேலூர் மாவட்டம் முழுவதும் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் உள்ள சாலை, நீர்நிலை புறம்போக்கு உள்ளிட்ட ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் தகுதியான நபர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் கீழ் வீடுகள் கட்டித் தரும் பொருட்டு கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கிராமப்புறங்களில் உள்ள சாலை, ஏரி, குளம், கால்வாய், மேய்க்கால் உள்ளிட்ட ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் நபர்களுக்கு மாற்று இடம் தேர்வு செய்து இலவச வீட்டுமனை பட்டா வழங்கி பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித் தரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர கிராமப்புற மற்றும் மாநகராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் ஆட்சேபனை அற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்குமேல் குடியிருந்து வரும் நபர்களுக்கு அதே இடத்தில் வரன்முறைப்படுத்தி பட்டா வழங்குவது தொடர்பாக கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. நாளது தேதி வரை மாவட்டத்தில் 15,746 நபர்கள் தகுதியுள்ளவர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களது விவரம் மாவட்ட இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே, சொந்தமாக நிலம் வைத்திருப்போர், அரசால் பட்டா வழங்கப்பட்டோர், அரசு பணிகளில் இருப்பவர்கள், வாடகை வீட்டில் வசிப்பவர்கள், ரூபாய். 3 இலட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் உடையவர்கள் ஆகியோர் இத்திட்டடத்தின் கீழ் பட்டாக்கள் பெற தகுதியற்றவர்கள் ஆவர்.

எனவே மேற்கண்ட கணக்கெடுப்பு பணிகளில் தகுதியான நபர்கள் எவரது பெயரேனும் விடுபட்டு இருப்பின் அவர்கள் http://vellore.nic.in/notice_category/announcements என்ற இணையதள முகவரியில் உள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் ஆவண ஆதாரங்களுடன் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அ.சண்முகசுந்தரம் அவர்கள் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறார்.

ஒம்./-------------
மாவட்ட ஆட்சியர்
வேலூர்-9

# வேலூர் மாவட்டம்

## அரசாணை எண்.318-ன் கீழ் ஆட்சேபனையற்ற/ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் தகுதியான நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கக் கோரும் விண்ணப்பம்.

| | | |
|---|---|---|
| 1 | வட்டத்தின் பெயர் | |
| 2 | கிராமத்தின் பெயர் | |
| 3 | புல எண் | |
| 4 | ஆக்ரமணம் செய்துள்ள பரப்பு (ச.மீ.) | |
| 5 | புறம்போக்கு வகைப்பாடு | |
| 6 | வீட்டின் தன்மை (குடிசை/ஓடு/சிமெண்ட் ஷீட்/மாடி வீடு) | |
| 7 | ஆக்ரமணதாரர் பெயர் | |
| 8 | தந்தை/கணவர் பெயர் | |
| 9 | பாலினம் (ஆண்/பெண்) | |
| 10 | ஆக்ரமணதாரர் முகவரி | |
| 11 | இனம் | |
| 12 | தொழில் | |
| 13 | ஆண்டு வருமானம் | |
| 14 | ஆதார் எண் | |
| 15 | கைபேசி எண் | |
| 16 | குடும்ப அட்டை எண் | |

நாள்: விண்ணப்பதாரர் கையொப்பம்